செ.வெ.எண் 4 நாள்:- 03.12.2017

**உலக மாற்றுதிறனாளிகள் தினத்தினை முன்னிட்டு பாளையங்கோட்டை சுபா ஸ்ரீ ஹாலில் திருநெல்வேலி மாவட்ட அரசு பணி மாற்றுதிறனாளி நல சங்கத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்துாரி இ.ஆ.ப அவர்கள் கலந்து கொண்டு இரத்த தான முகாம் துவக்கி வைத்தும் பல்வேறு நலதிட்ட உதவிகள் மற்றும் பரிசுகள் வழங்கினார்கள்.**

---

உலக மாற்றுதிறனாளி தினத்தினை முன்னிட்டு திருநெல்வேலி மாவட்ட அரசு பணி மாற்றுதிறனாளி நல சங்கத்தின் மூலம் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்துாரி இ.ஆ.ப அவர்கள் கலந்து கொண்டு. இரத்த தான முகாமினை துவக்கி வைத்தும் அரசு துறை மாற்றுதினாளி ஊழியர்கள் நலனுக்காக பாடுபட்டவர்களுக்கு நினைவு பரிசும், கேடயமும் மறைந்த உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

<u>நிகழச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியதாவது:-</u>

உலக மாற்றுதிறானாளி தினவிழா கொண்டாபட வேண்டிய தினம் மாற்றுதிறனாளி என்பது மாற்று திறமை கொண்ட நபர் என்பதாகும் இன்று மாற்றுதிறனாளிகள் உலக அளவில் மிகப் பெரிய சாதனை மற்றும் சரித்திரம் படைத்து வருகின்றனர் உதாரணமாக ஸ்டிபன் ஆக்கின்ஸ் சிறந்த விஞ்ஞானி அவர் ஒரு மாற்று திறனாளி, சுதா சந்திரன் சிறந்த பரத நாட்டிய கலைஞர் அவர் ஒரு மாற்று திறனாளி மேலும் அருன்னிமா சின்கா உலக அளவில் முதல் பெண்மணி இமாலய உச்சியில் ஏறி சாதனை புரிந்தவர் ஒரு மாற்றுதிறனாளி. மேலும் பாரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற மாரியப்பன் ஒரு மாற்றுதிறனாளி. மேலும் இது போன்று பல மாற்று திறனாளிகள் சாதனை புரிந்துள்ளார்கள். மாற்று திறனாளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் கழிப்பறை, மேலும் சாய்வு தள படிகட்டுகள் போன்றவை திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து அரசு அலுவலகங்களிலும் ஏற்பாடு செய்து வருகின்றனர். மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்று திறனாளிகளுக்கான கழிப்பறை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து அரசு அலுவலகங்களிலும் சிறப்பு கழிப்பறை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளபட்டு

வருகிறது. அனைத்து மாற்று திறானிகளுக்கும் அரசு வேலை கிடைப்பதில்லை. அனைவருக்கும் வேலை உருவாக்கி கொடுக்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் சிறப்பு மாற்று திறனாளி வேலைவாய்ப்பு முகாம் 19 வட்டாரங்களில் 12 வட்டாரங்கள் முடிக்கபட்டுள்ளது. இந்த வேலை வாயப்பு முகாமில் 125 நபர்களுக்கு மேல் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் உள்ள தனியார் (MC DONALD) நிறுவனத்தில் 100% மாற்றுதிறானிகள் மூலம் இயக்கப்பட்டு வருகிறது. மாற்று திறனாளிகளுக்கு சிறப்பு பயிற்சி அளித்து அவர்களுக்கான வேலை வாங்கி தருவதில் அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது மேலும் தமிழ்நாடு அரசு மாற்று திறணாளிகளுக்கான சிறப்பு கடன் வழங்கப்பட்டு வருகிறது. அது போல் சிறு தொழில் கடன், மாற்று திறனாளிகள் துறைகளின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது அரசு மாற்றுதிறனாளிகளுக்கான அனைத்து கடன்களும் வழங்கி கொண்டு வருகிறது. அனைத்து அரசு மாற்றுதிறனாளி உழியர்களும் சிறப்பாக பணிபுரிந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு சிறந்த மாற்று திறானிகள் பணிபுரியும் மாவட்டத்திற்கான விருது வழங்கி தருவதற்கான சிறப்பான முறையில் பணி ஆற்ற வேண்டும் என பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் நாங்நேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.H.வசந்தகுமார் மாவட்ட மாற்றுதிறனாளி நல அலுவலர் திருமதி சாந்திகுளோரி ஏமரால்ட் மற்றும் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் ஆலொசகர்கள் திரு. அல்லாபிச்சை திரு. விஜயசாரதி திரு. செல்வராஜ் திரு.அப்பாஸ் திரு.ஜெகதீசன் திரு.லெனின் திரு.குமாரவேல் திரு.துரைசிங், திரு.வள்ளிநாயகம் போன்ற பல நிர்வாகிகள் உறுப்பினர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.